செ.வெ.எண்.38 நாள்: 13.09.2017

**திருநெல்வேலியில் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்களுக்கான டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் மாணவ, மாணவிகள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்களுக்கான டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் மாணவ, மாணவிகள் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.09.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் உட்பட 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இது தொடர்பான ஆய்வுகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆய்வின்போது பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரி வளாக பகுதியில் டெங்கு கொசுப்புழுக்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. டெங்கு கொசு பகலில் கடிக்கக்கூடிய கொசுவாகும். பகலில் அதிக அளவில் மாணவ, மாணவியர்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருப்பார்கள். எனவே, இப்பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் டெங்கு கொசு உற்பத்தியாவதை முற்றிலும் கண்காணித்து தடுக்கவே இது போன்ற ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகின்றது. டெங்கு கொசுக்கள் நல்ல நீரில் மட்டுமே முட்டையிட்டு இனவிருத்தி செய்திடும். தண்ணீர் தொட்டி, கழிப்பிடங்களில் உள்ள தொட்டிகள் மற்றும் மழை நீர் தேங்கக்கூடிய பிளாஸ்டிக் கப், டயர் உள்ளிட்டவைகளில் டெங்கு கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடமாகும். எனவே, இவை அனைத்தையும் கண்காணிக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் சுகாதார குழுக்களை அமைத்து மாணவ, மாணவியர்களையும் இப்பணிகளில் ஈடுபடுத்திட வேண்டும். இதன் மூலம் மாணவ, மாணவிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வாய்ப்பாக அமையும். பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வரும் மாணவ, மாணவிகளின் சுகாதாரத்தை பேணுவது தலைமை ஆசிரியர் மற்றும் கல்லூரி முதல்வர்களின் பொறுப்பாகும். வாரத்திற்கு ஒருமுறை சுகாதாரப் பணிகளை மேற்கொண்டாலே டெங்கு கொசுப்புழுக்களை ஒழிப்பதுடன் சுகாதாரமும் மேம்பாடு அடையும். டெங்கு கொசுப்புழுக்கள் உற்பத்தி இல்லை என்பதை உறுதி செய்திட வேண்டும்.

டெங்கு கொசுக்கள் 500 மீட்டர் தூரம் வரை பறந்து சென்று கடிக்கும் என்பதால் பள்ளி, கல்லூரி வளாகம் மட்டுமல்லாது, அருகிலுள்ள பகுதிகளையும் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளுக்கு காய்ச்சல் பாதிப்பு இருந்தால் உடனடியாக சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும். தொடர்ந்து வருகை தராத மாணவர்களின் இல்லத்திற்கே சுகாதாரத்துறை அலுவலர்கள் நேரில் சென்று நடவடிக்கை எடுப்பார்கள். கிராமப் பகுதியாக இருந்தால் வட்டார மருத்துவ அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரிடமும், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் சுகாதார அலுவலர் மற்றும் அலுவலர்களிடமும் பேரூராட்சி பகுதிகளில் நகர் நல அலுவலரிடமும் தகவல் தெரிவிக்க வேண்டும். இதற்கான தனியாக பதிவேடு பராமரிக்க வேண்டும். மேலும், விடுதிகள் உள்ள பள்ளி, கல்லூரிகள் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். பள்ளி வளாகங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை பிரித்து சேகரிக்கும் வகையில் குப்பைத்தொட்டிகளை வைக்க வேண்டும். மாணவ, மாணவியர்களே குப்பைகளை பிரித்து தொட்டிகளில் போடுவதால் இதே நடைமுறைகளை வீடுகளிலும் பயன்படுத்தும் விழிப்புணர்வு ஏற்படும். இதன் மூலம் சுகாதாரம் மேம்படும். மகளிர் பயிலும் பள்ளிகளில் பெண்களுக்கு அடிப்படை தேவையான நாப்கின்களை தட்டுப்பாடின்றி வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், புளூவேல் இணையதள விளையாட்டு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், மாணவ, மாணவிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும். சந்தேகத்திற்குரிய மாணவ, மாணவிகள் குறித்து பெற்றோர்கள் மற்றும் 1098 என்ற தொலைபேசியில் தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்மேற்கு பருவமழை காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ள ஆற்றங்கரை பகுதியிலுள்ள பள்ளி, கல்லூரி பகுதியில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காவல்துறை, தீயணைப்புத்துறை, ஆம்புலன்ஸ் தொடர்பான தொலைபேசி எண்களை தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள கட்டிடங்களில் மழை நீர் தேங்கி உள்ளதா? என்பதை கண்காணிக்க வேண்டும். கட்டிடங்கள் உறுதி தன்மையுடன் உள்ளதா என்பதையும் ஆய்வு செய்திட வேண்டும். டெங்கு ஒழிப்பு மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பாக பள்ளி, கல்லூரிகளுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தேவையான உதவிகள் செய்யப்படும். பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் மாணவ, மாணவிகளுடன் ஒருங்கிணைந்து சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு திருநெல்வேலி மாவட்டம், டெங்கு இல்லாத சுகாதாரமான மாவட்டமாக திகழ முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், சென்னை சுகாதாரத்துறை இணை இயக்குநர் (கொள்ளை நோய்) மரு.பிரேம்குமார், சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர்கள் (திருநெல்வேலி) மரு.செந்தில்குமார், (சங்கரன்கோவில்) மரு.சோமசுந்தரம், திருநெல்வேலி மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாவட்ட கல்வி அலுவலர்கள் (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ், (திருநெல்வேலி) திரு.ஜெயபாண்டி, (தென்காசி) திரு.சுடலை, மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் திரு.சந்திரசேகர், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.அழகுராஜன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாவட்ட சுகாதார கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு.அப்துல்காதர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி